# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
## முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
## முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
## எம்.சி.ஓ.பி. எண். 681/2016

2025ம் ஆண்டு ஜூலை திங்கள் 18ம் நாள் வெள்ளிக்கிழமை, இந்திய உறுதிமொழி சட்டம் (44/1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

ம.சா.1 முத்து

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் பால் வியாபாரம் செய்கிறேன். எனது தொழில் வருமானம் குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சைக்கிளில் ஜனப்பன் சத்திரம் கூட்ரோடில் பால் குடுத்துவிட்டு திரும்ப வரும்போது மேம்பாலத்தில் நான் சென்ற போது பின்னால் வந்த இருசக்கர வானம் வந்து என் மீது மோதிவிட்டது. நான் சைக்கிளில் தான் சென்றேன் மனுவில் மோட்டார் சைக்கிள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. பின்னால் வந்து மோதிய வாகனம் பற்றி தெரியாது. விபத்து நடந்த உடன் ஸ்டான்லி மருத்துவமனையில் சேர்த்தார்கள். விபத்து சம்பந்தமாக யார் புகார் கொடுத்தார்கள் என்று தெரியாது. வர்தா புயல் வந்து 4 நாட்கள் கழித்து விபத்து நடந்தது. விபத்தில் வலது கண்ணில் காயம் ஏற்பட்டது வலது கண் எனக்கு தற்போது தெரியாது. வலது காதில் அடி பட்டதில் கேட்காது விபத்தில் முகம் முழுவதும் காயம் ஏற்பட்டது. அம்பத்தூர் எஸ்.பி. மருத்துவமனையில் எனக்கு அறுவை சிகிச்சை செய்தார்கள். கால் மற்றும் கையில் காயம் எதுவும் ஏற்படவில்லை. விபத்தில் என்னுடைய அஜாக்கரதையாலும் கவனக்குறைவாலும் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் மீது மோதிய வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. மனுவில் நான் 4 இலட்சம் இழப்பீடு கேட்டுள்ளேன். மருத்துவ பில்களில் கையெழுத்து போட மறுத்துவிட்டார்கள். மருத்துவ பில்கள் வேறு வழக்கு தொடர்பாக வழங்கப்பட்டவை என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு சாதாரண காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் கேட்கும் இழப்பீட்டு தொகை அதிகம் என்றால் சரியல்ல. **மருத்துவ குழு எனக்கு வழங்கிய ஊனச்சான்றிதழ் நீ.ம.சா.ஆ. 1 ஆகும்.**

**மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி.